DECEMBER 2022

U/ID 22221/ UCZ3A/UCW3A/ UCY3A/UCV3B

Time : Three hours Maximum : 75 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. What is Equity Share?
   சம உரிமை பங்குகள் என்றால் என்ன?

2. Write a short note on Re-issue of shares.
   பங்குகள் மறுவெளியீடு ஒரு சிறு குறிப்பு எழுதுக.

3. Define Debentures.
   கடனீட்டு பத்திரங்கள் வரையறு.

4. State the meaning of acquisition of business.
   வணிகத்தை கையகப்படுத்துதல் என்பதன் பொருளை கூறுக.

5. What is meant by profit prior to incorporation?
   பதிவுக்கு முந்தைய இலாபம் என்பது யாது?

6. Give the meaning of interim dividend.
   இடைக்கால பங்காதாயம் என்பதன் பொருளை தருக.

7. What do you understand by current liabilities?
   நடப்பு பொறுப்புகள் பற்றி நீவிர் அறிவது யாது?

8. What is Managerial remuneration?
   நிர்வாகத்தினருக்கான சம்பளம் என்றால் என்ன?

9. What are divisible profits?
   பகிர்ந்து அளிக்கக்கூடிய இலாபங்கள் யாவை?

10. What is Average Capital employed?
    சராசரி மூலதம் என்றால் என்ன?

11. What do you understand by alternation of share capital?
    மாறுபடும் பங்குமுதல் குறித்து நீவிர் அறிவது யாது?

12. What is internal reconstruction?
    உள் மறு சீரமைப்பு என்றால் என்ன?

SECTION B — (5 × 5 = 25 marks)

Answer any FIVE questions.

13. What are the difference between shares and debentures?

பங்குகளுக்கும், கடனீட்டு பத்திரங்களுக்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?

14. Mohan Ltd issued 2000 shares of Rs. 100 each at a discount of 10% payable Rs. 25 on application, Rs. 30 on allotment and Rs. 35 on call. All money were duly received expect on 300 shares on which call money was not received. These shares were forfeited. Give journal entry for forfeiture.

மோகன் லிமிடெட் 2,000 பங்குகள் தலா ரூ. 100 வீதம் 10% தள்ளுபடியில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 25ம், ஒதுக்கீட்டின் போது ரூ. 30 ம் மற்றும் அழைப்பின் போது ரூ. 35 செலுத்தப்பட வேண்டும். அழைப்பு பணம் பெறபடாத 300 பங்குகளை தவிர அனைத்து பணங்களும் முறையாக பெறப்பட்டன. அழைப்பு பணம் பெறபடாத பங்குகள் அனைத்து பறிமுதல் செய்யப்பட்டன. பங்குகள் பறிமுதல் செய்ததற்கான குறிப்பேட்டு பதிவுகளை தருக.

15. What are the steps involved in calculation of profit prior to incorporation?

பதிவுக்கு முந்தைய இலாபத்தை கண்டுபிடிக்கும் பல்வேறு படிநிலைகள் யாவை?

16. The company was incorporated on 1.6.2014 in order to purchase a running business from 1.1.2014. The following particulars are available from its records.

		Rs.
(a)	Total sales for 2014	80,000
(b)	Sales from 1.1.2014 to 31.5.2014	20,000
(c)	Gross profit for the whole year	30,000
(d)	Total expenses of 2014 (including directors fees Rs. 1000)	25,000
(e)	Company's Share Capital	75,000

Find out profit prior to incorporation and after incorporation by preparing profit and loss account.

1.1.2014 முதல் இயங்கும் வணிகத்தை வாங்குவதற்காக 1.6.2014 அன்று அந்நிறுவனம் பதிவு செய்யப்பட்டது. பின்வரும் விபரங்கள் அதன் பதிவுகளிலிருந்து கிடைக்கின்றன.

		ரூ.
(அ)	2014ம் ஆண்டுக்கான மொத்த விற்பனை	80,000
(ஆ)	1.1.2014 முதல் 31.5.2014 வரை விற்பனை	20,000
(இ)	வருடம் முழுவதும் மொத்த இலாபம்	30,000
(ஈ)	2014ம் ஆண்டுக்கான மொத்த செலவு (இயக்குநர் கட்டணம் ரூ. 1000 சேர்த்து)	25,000
(உ)	நிறுமத்தின் பங்கு முதல்	75,000

இலாப நட்ட கணக்கினை தயாரித்து பதிவுக்கு முந்தைய இலாபத்தையும், பதிவுக்கு பின் உள்ள இலாபத்தையும் கண்டுபிடிக்கவும்.

17. From the following balances prepare the balance sheet of a company in the prescribed format.

	Rs.
Goodwill	1,50,000
Investment	2,00,000
Share Capital	8,00,000
Securities premium	15,000
Preliminary Expenses	10,000
Profit and Loss A/c (Cr's)	25,000
Debentures	60,000
Other Fixed Assets	4,70,000
Stock	80,000
Debtors	60,000
Bank balance	30,000
Unsecured loans	65,000
Sundry Creditors	35,000
Reserves	1,10,000
Plant	1,10,000

பின்வரும் இருப்புகளில் இருந்து இருப்பு நிலை குறிப்பை நிர்ணயிக்கப்பட்ட வடிவத்தில் தயாரிக்கவும்.

	ரூ.
நற்பெயர்	1,50,000
முதலீடு	2,00,000
பங்கு முதல்	8,00,000
பிணையங்களின் முனைமம்	15,000
முதன்மை செலவுகள்	10,000
இலாபநட்ட க/கு (வரவு)	25,000
கடனீட்டு பத்திரங்கள்	60,000
மற்ற நிலையான சொத்துக்கள்	4,70,000
சரக்கிருப்பு	80,000
கடனாளிகள்	60,000
வங்கியிருப்பு	30,000
பிணையில்லா கடன்கள்	65,000
பற்பல கடனீந்தோர்கள்	35,000
காப்புகள்	1,10,000
தடவாளங்கள்	1,10,000

18. Goodwill is to be valued of 3 years purchase of five years average profit. The profit for the last five years of the firm were:

2014 – Rs. 4,800, 2015 – Rs. 7,200, 2016 – Rs. 10,000

2017 – Rs. 3,000, 2018 – Rs. 5,000

Calculate the amount of goodwill.

கடந்த ஐந்து ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டு கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயர் மதிப்பை கணக்கிடு. முந்தைய ஐந்தாண்டுகளின் இலாபங்கள்.

2014 – ரூ. 4,800, 2015 – ரூ. 7,200, 2016 – ரூ. 10,000

2017 – ரூ. 3,000, 2018 – ரூ. 5,000

நற்பெயரின் தொகையை கணக்கிடுக.

19. Marshal limited has share capital of Rs. 5,00,000 divided into 5,000 shares of Rs. 100 each. fully paid. Show the entries under each of the following conditions.

(a) When Marshal limited resolves to sub-divide the shares into 5,000 shares of Rs. 10 each fully paid.

(b) When Marshal limited resolves to convert its 5,000 shares of Rs. 100 each into Rs. 5,00,000 worth of stock.

மார்ஷல் லிமிடெட் ரூ. 5,00,000 பங்கு மூலதனத்தை தலா ரூ. 100 என 5,000 பங்குகளாக பிரித்து முழுமையாக செலுத்தப்படுகிறது. பின்வரும் ஒவ்வொரு நிபந்தனைகளின் கீழ் குறிப்புகளை காட்டு ;

(அ) மார்ஷல் லிமிடெட் வரையறுக்கப்பட்ட பங்குகளை 50,000 பங்குகளாக பங்கு ஒன்றுக்கு ரூ. 10 வீதம் முழுவதுமாக செலுத்தப்பட வேண்டும்.

(ஆ) மார்ஷல் லிமிடெட் அதன் 5,000 பங்குகளை தலா ரூ. 100 க்கு ரூ. 5,00,000 மதிப்புள்ள பங்குகளாக மாற்றும் போது.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. 'A' Ltd. invited applications for 10,000 shares of Rs. 100 each at a discount of 5% payable as follows:

on application Rs. 25

on Allotment Rs. 34

on First and Financial call Rs. 36

Applications were received for 9,000 shares and all these were accepted. All moneys due were received except the first and final call on 100 shares which were forfeited. Of the forfeited shares, 50 shares were re issued at the rate of Rs. 90 as fully paid. Show necessary juornal entries.

A என்ற நிறுமம் 10,000 பங்குகளை பங்கு ஒன்று ரூ. 100 வீதம் 5% தள்ளுபடியில் வெளியிட்டு பின்வருமாறு பணத்தை பெற்று கொள்வதாக விண்ணப்பங்கள் வரவேற்கப்பட்டன.

விண்ணப்பத்தின் போது ரூ. 25

ஒதுக்கீட்டின் போது ரூ. 34

முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ. 36

9,000 பங்குகளுக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டு அவை அனைத்தும் ஏற்று கொள்ளப்பட்டன. 100 பங்குகளுக்குரிய முதல் மற்றும் இறுதி அழைப்பு பணம் நீங்கலாக அனைத்து பணமும் பெற்று கொள்ளப்பட்டன. இப்பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன. ஒறுப்பிழப்பு செய்யப்பட்ட பங்குகளில் 50 பங்குகள், பங்கு ஒன்றுக்கு ரூ. 90 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக மறுவெளியீடு செய்யப்பட்டன. தேவையான குறிப்பேட்டு பதிவுகளை தருக.

21. Give Journal entries for the following:

(a) Issue of Rs. 1,00,000, 11% Debentures at par and redeemable at par

(b) Issue of Rs. 1,00,000, 11% Debentures at premium of 5% and redeemable of par.

(c) Issue of Rs. 1,00,000, 11% Debentures of discount of 5% and redeemable at a premium of 5%

(d) Issue of Rs. 1,00,000, 11% Debentures at par, but redeemable at 5% premium.

(e) Issue of Rs. 1,00,000, 11% Debentures at premium of 5% but redeemable at 5% discount.

கீழே கண்டவற்றிற்கான குறிபேட்டு பதிவுகளை தருக.

(அ) ரூ. 1,00,000, 11% கடன் பத்திரங்களை அதன் முக மதிப்பில் வெளியிட்டு, முக மதிப்பில் மீட்கப்பட்டது.

(ஆ) ரூ. 1,00,000, 11% கடன் பத்திரங்களை 5% அதன் முனைமத்தில் வெளியிட்டு, முக மதிப்பில் மீட்கப்பட்டது.

(இ) ரூ. 1,00,000, 11% கடன் பத்திரங்களை 5% தள்ளுபடியில் வெளியிட்டு, 5% முனைமத்தில் மீட்கப்பட்டது.

(ஈ) ரூ. 1,00,000, 11% கடன்பத்திரங்களை அதன் முக மதிப்பில் வெளியிட்டு, 5% முனைமத்தில் மீட்கப்பட்டது.

(உ) ரூ. 1,00,000, 11% கடன்பத்திரங்களை 5% முனைமத்தில் வெளியிட்டு 5% தள்ளுபடியில் மீட்கப்பட்டது.

22. Explain difference modes of winding up of limited companies.

வரையறுக்கப்பட்ட நிறுமங்களின் பலவகையான கலைப்புகளை பற்றி விளக்குக.

23. A firm earned net profit during the last five years are as follows

	Rs.
First year	40,000
Second year	42,000
Third year	45,000
Fourth year	46,000
Fifth year	47,000

The investment of the firm is Rs. 4,00,000. A fair rate of return 10%.

Calculate the value of goodwill.

ஒரு நிறுவனம் கடந்த ஐந்து ஆண்டுகளில் ஈட்டிய நிகர இலாபம்

முதல் ஆண்டு	40,000
இரண்டாம் ஆண்டு	42,000
மூன்றாம் ஆண்டு	45,000
நான்காம் ஆண்டு	46,000
ஐந்தாம் ஆண்டு	47,000

அந்த நிறுவனத்தின் முதலீடு ரூ. 4,00,000 இந்த முதலீட்டின் நியாயமான இலாபம் 10%

நற்பெயரின் மதிப்பை கணக்கிடுக.

24. X Limited has 60,000 equity shares of Rs. 100 each, Rs. 80 per share called up. Now the company decides to pay off Rs. 20 per share of the paid up capital and at the same time to reduce the Rs. 100 share to Rs. 60 share fully paid up by cancelling the unpaid amount.

Give Journal Entries.

X லிமிடெட் தலா ரூ. 100 உள்ள 60,000 ம் சமஉரிமை பங்குகளை ரூ. 80க்கு அழைக்கப்படுகிறது. இப்போது நிறுவனம் செலுத்தப்பட்ட மூலதனத்தின் ஒரு பங்கிற்கு ரூ. 20 செலுத்தவும் மற்றும் அதே நேரத்தில் ரூ. 100 பங்கை ரூ. 60க்கு குறைக்கவும் முடிவு செய்யப்படுகிறது.

இதற்கான குறிப்பேட்டு பதிவுகளை தருக.